4. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1983—84 மற்றும் 1984-85–அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983—84 மற்றும் 1984—85 ஆகிய ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-45

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1983-84 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளதெனத் தெரியவந்துள்ளது. அந்த மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக்கணக்கு குழு, 1983-84 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1983-84 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப்பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1983-84 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் தற்பொழுது தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மிகைச் செலவு மொத்தம் ரூ. 55.20 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில் பாசனம், ஓய்வூதியம், ஏனைய ஓய்வுகால நன்மைகள், பொதுக்கடன் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றின் கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. நிலுவையாக இருந்த பட்டிகளுக்கு தொகை கொடுக்கப்பட்டதாலும் கால்வாய் பிரிவு, தொலைபேசிக் கட்டணங்கள், பாசனத் திட்டங்களுக்கான பராமரிப்புச் செலவு ஆகியவற்றாலும், பாசனம் என்பதின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. இவை, தவிர்க்க முடியாதனவாக இருந்தன.

4. ஓய்வூதியங்கள், ஏனைய ஓய்வுகால நன்மைகள் என்பதன் கீழ் ஏற்பட்ட மிகைச் செலவிற்கான காரணம். ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், அவ்வப்போது கூடுதலாக அகவிலைப்படி தவணைத் தொகை வழங்கியதும், ஓய்வூதியம் வழங்கிய நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மருத்துவச் சோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற அனுமதி வழங்கியதும் 1—4—1982 முதற்கொண்டு குறைந்த அளவு ஓய்வூதியத் தொகையை ரூ. 100-லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தியதும் ஆகும்.

5. பொதுக்கடன் திருப்பிச் செலுத்துதல் என்பதின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டதற்கான காரணம், வழிவகை முன்பணங்களை அதிக அளவிற்குத் திருப்பிக் கொடுத்ததும் 31—3—1984 ஆம் நாளன்று மத்திய அரசு திட்டத்தில் சேராத பணிகளுக்கான சிறப்பு நடுத்தரக்கால கடன், வழங்கியதையடுத்து இந்திய ரிசர்வ் வங்கியிடம் இருந்து பெறப்பட்ட மிகைப் பற்று முழுவதையும் கொடுத்து தீர்த்துவிட்டதும் ஆகும்.

6. 1983-84 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான, இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு பேரவையை வேண்டுகிறேன்.

1984-85 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1984—85 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1984-85 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக்கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1984—85 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளை சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் தற்பொழுது தாக்கல் செய்யப்படுகின்றன.

இந்த மிகைச் செலவு மொத்தம் ரூ. 9.79 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், மாவட்ட நிருவாகம், பொதுப் பணிகள் கட்டிடங்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும், இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் ஆகிய வற்றின் கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. கூடுதல் அகவிலைப்படித் தவணைத்தொகை கூடுதலாக வழங்கியதாலும் கிராம ஊழியர்களுக்குத் தனி ஒரு மொத்த தொகையும் மதிப்பூதிய நிலுவைத் தொகையும் வழங்கிய தாலும் மாவட்ட நிருவாகம் என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. தவறான வகைப்பாடுகளைச் சரி செய்ததாலும் மிகைச்செலவு ஏற்பட்டது,

4. பொதுப் பணித்துறை மானியம் சாராச் செலவு களையும் ஏனைய மானியக் கோரிக்கைகள் தொடர்பான பராமரிப்பு பழுது பார்ப்புச் செலவுகளையும் இதில் கணக்கெழுதியதாலும், இறுதித் திருத்த நிதியொதுக் கத்தில் நிதியொதுக்கம் கிடைக்குமென்று எதிர்பார்த்து, ஏனைய சில பெருந் தலைப்புகளின் கீழ் மிகைச் செலவு செய்ததாலும் பொதுப் பணிகள் கட்டிடங்கள் என்பதின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதி கரித்ததாலும் குறைந்த அளவு ஓய்வூதிய வரையறை உயர்த்தப்பட்டதாலும், தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதி முறைகளை 1—10—1979-க்கு முன் ஓய்வூதியம் பெற்றவர் களுக்கும் நீட்டித்ததன் காரணமாக அவர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கியதாலும் அகவிலைப்படி தவணைத் தொகை கூடுதலாக வழங்கியதாலும், ஓய்வூதியங்கள் ஏனைய ஓய்வுகால நன்மைகள் என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு உள்ளூர் அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வரிவசூல் அதிகரித்ததன் காரணமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அளவிற்குத் தொகை ஒதுக்கியதாலும் 1983-84, 1984-85 ஆண்டுகளுககாக ஒதுக்கப்பட்ட தொகைகளை உள்ளாட்சி மன்றங்கள் அடுத்த ஆண்டுகளில் பெற்றதாலும் இழப்பீடுகள் ஒதுக்கீடுகள் என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

7. 1984-85 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு பேரவை யை வேண்டி அமர்கிறேன்.